C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 15 DECEMBER 2023 ஆகாரம் : 12

## உன்னதத்தில் இருக்கிற தேவனுக்கு மகிமையும்,

### பூமியிலே சமாதானமும்,


### மனுஷர் மேல் பிரியமும்

### உண்டாவதாக

லூக்கா 2:14

# Christmas Program Plan - 2023

| Event | Date | Time |
|---|---|---|
| 1. CHILDREN BIBLE SCHOOL (CBS)<br>CHILDREN CHRISTMAS PROGRAM-2023<br>சிறுவர் கிறிஸ்துமஸ் கலைநிகழ்ச்சி -2023 | 2ND DECEMBER -2023 (SATURDAY) | 6.30PM |
| 2. CHRISTMAS CAROL SERVICE-2023<br>கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை -2023 | 9TH DECEMBER -2023 (SATURDAY) | 6.30PM |
| 3. FAMILY CHRISTMAS SING SONG SERVICE -2023<br>குடும்ப கிறிஸ்துமஸ் கீத ஆராதனை -2023 | 16TH DECEMBER -2023 (SATURDAY) | 6.30PM |
| 4. CHRISTMAS TREE -2023<br>கிறிஸ்துமஸ் மரவிழா-2023 | 23RD DECEMBER -2023 (SATURDAY) | 6.30PM |
| 5. CHRISTMAS SERVICE -2023<br>கிறிஸ்துமஸ் ஆராதனை -2023 | 25TH DECEMBER -2023 (MONDAY) | 12PM-2PM |
| 6. CHRISTMAS CAROL ROUNDS -2023<br>கிறிஸ்துமஸ் கீதபவனி-2023 | 10TH - 20TH DECEMBER -2023 | - |
| 7. 12- HRS CHAIN PRAYER -2023<br>12மணி நேரம் சங்கிலி தொடர் ஜெபம் -2023 | 31ST DECEMBER -2023 (SUNDAY) | 6.00AM-6.00PM |
| 8. YEAR END -2023/ NEW YEAR SERVICE -2024<br>பழைய ஆண்டு-2023 / புதிய ஆண்டு-2024 ஆராதனை | 31ST DECEMBER -2023/ 1ST JANUARY -2024 | - |




**அன்பிற்கினியவர்களே, இறைமகன் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

**THE OTHER WISEMAN** (மற்ற ஞானி) என்ற நூலை 1895–ஆம் ஆண்டு **HENRY VAN DYKE** என்பவரால் எழுதப்பட்டு ஆயிரக்கணக்கானோர் படித்துள்ளனர். இதன் கருத்து என்னவெனில், பாரசீகத்தை சேர்ந்த அர்தபன் என்ற நான்காம் ஞானி கிறிஸ்து பிறந்துள்ளார் என்கிற செய்தியை நட்சத்திரத்தின் வழியாக அறிந்து இவர் குழந்தை இயேசுவைக் காண புறப்படுகிறார்.

அதற்காக விலை உயர்ந்த பரிசு பொருட்களாக ஒரு சபையர், ஒரு மாணிக்கம், மற்றும் மிகுந்த விலை உயர்ந்த முத்து இவற்றை எடுத்துக்கொண்டு பயணத்தை தொடர்ந்தார்.

பயணத்தில் இறக்கும் நிலையில் இருக்கும் மனிதன் ஒருவரை காப்பாற்ற செலவழிக்கிறார், அடுத்தது ஒரு குழந்தையை காப்பாற்ற மற்றொரு பொருளை செலவழிக்கிறார், கடைசியாக அடிமையாக விற்கப்பட இருந்த ஒரு இளம் பெண்ணை மீட்க மற்றொரு விலை உயர்ந்த முத்தையும் செலவழித்து விடுகிறார். அவரிடமிருந்து விலை உயர்ந்த பொருட்கள் மூன்றும் பிறரது வாழ்வுக்காக செலவழிந்து விடுகிறது.

இது ஒரு நீண்ட பயணம் அதற்குள்ளாக 33 ஆண்டுகள் முடிந்து விடுகிறது, ஆண்டவர் இயேசுவையும் சிலுவையில் அறைந்து விடுகின்றனர். இயேசுவை தேடிச்சென்ற இந்நெடிய பயணத்தில் கலைத்து ஓய்ந்திருந்த நான்காம் ஞானியான அர்தபன் தலையின் மீது வீட்டின் ஓடுகள் சரிந்து விழுந்து இறக்கும் நிலையை அடைகிறார்.

அந்த நேரத்தில் "இந்த சிறியோரில் ஒருவருக்கு எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்"(மத்தேயு 25:40) என்கிற குரல் வானில் இருந்து அவருக்கு ஒலிக்கிறது. அவர் ஆச்சரியம் மற்றும் மகிழ்ச்சியின் அமைதியான பிரகாசத்தில் இறக்கிறார். அவரது பொக்கிஷங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மற்ற ஞானி தனது ராஜாவாம் இயேசுவைக் கண்டுபிடித்தார்.

கிறிஸ்து பிறப்பின் நோக்கமே உலக மக்கள் அனைவரும் வாழ்வில் நிறைவு பெறுவதற்கே. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; அவருக்கு உள்ளத்தில்,இல்லத்தில் இடம் அளித்தோர்இடையே இருக்க விரும்புகிறார். நாம் மெய்யாகவே ஆண்டவருக்கு இடம் தந்திருக்கிறோமா? சிந்திப்போம்.

மனிதன் கடவுளைக் காண முடியாததால், கடவுளே மனிதனை நோக்கி வந்தார். இம்மாபெரும் நிகழ்வினை பற்றி தூய பவுல் அடிகளார் இப்படிக் குறிப்பிடுகின்றார்; "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயி ருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை.ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" (பிலிப்பியர் 2:6—8)

இத்தகைய இறைவனை தூய உள்ளத்தோர் தான் காண முடியும். அரச மாளிகையில் அரசாட்சியில் இருந்த ஏரோதுவால் பாலன் இயேசுவை காண முடியவில்லை. ஆனால் சாதாரண, சாமானிய படிப்பறிவில்லாத இடையர்கள் பாலன் இயேசுவைக் கண்டார்கள், மகிழ்ந்தார்கள், மற்றவர்களிடையே இம்மகிழ்வைப் பகிர்ந்தார்கள். நாம் என்னத்தைப் பகிருகிறோம்?

கிறிஸ்மஸ் பண்டிகை என்பது கொடைப் பண்டிகை ஆகும்.உலக மீட்பிற்காக தாய் தந்தையாம் கடவுள் தமது குமாரன் இயேசுவை கொடுத்தார்.(யோவான் 3:16 ) மரியாள் தம் கருவறையைக் கொடுத்தார், யோசேப்பு மரியாளுக்கு பாதுகாப்பை கொடுத்தார், தேவ தூதர்கள் மேய்ப்பர்களுக்கு நற்செய்தியை கொடுத்தார்கள், மேய்ப்பர்கள் குழந்தை இயேசுவைக் கண்டு அந்த மகிழ்வின் செய்தியை எங்கும் கொடுத்தார்கள், நட்சத்திரம் வான

சாஸ்திரிகளுக்கு இயேசு பிறந்திருக்கும் இடத்திற்கு வழியை காண்பித்துக் கொடுத்தது. இந்த விழா காலத்தில் நாம் எதைக் கொடுக்கிறோம்?

"தூய உள்ளத் தோர் பேறு பெற்றோர்,ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத்தேயு 5:8)அமைதியின் அரசராய், அன்பின் சிகரமாய், விண்ணை விட்டு மண்ணில் வந்த உறவின் பாலமாய் உலகில் உதித்தவர் ஆண்டவர் இயேசு.

உலகில் உதித்த பாலன் இயேசுவுக்கு நம் உள்ளத்தில் நாம் வாழும் இல்லத்தில் இடம் அளிப்போம், அதற்காக நம்மையே அர்ப்பணிப்போம்.அவரின் ஆசிர்வாதம் நம்மிலே நிறைந்திட ஆண்டவர் இயேசுவுக்கு சாட்சிகளாய் வாழ்வோம்.ஒருவர் ஒருவர் மன்னித்து, ஏற்றுக்கொண்டு, அரவணைத்து உதவிகள் பல செய்து மகிழ்வுடன் கிறிஸ்து பிறப்பு விழாவினை சிந்தித்து செயல் விழாவாக மாற்றுவோம்,ஆண்டவரின் அருள் ஆசி நம்மிடையே பெருகுவதாக, ஆமென்.

அனைவருக்கும் இனிய கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு 2024 வாழ்த்துக்கள்.



இறைப் பணியில், ஆயர்.

*Rev. S.Baktha Thiyagarajan*

# சிந்தனை தாய்



கிருபை பெற்றவளே வாழ்க!
நீ கர்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாய்!
இது எப்படி கூடும் புருஷனை அறியேனே!

தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை!
இறை சித்தம் இதுவென்றால்
அவர் சித்தத்திற்கு என்னை ஒப்பு கொடுக்கிறேன்!

ஏச்சுக்கள் பேச்சுக்கள் ஏளனங்கள்!
ஏற்றார் மரியாள் இறை சித்தம் நிறைவேற!
மரியாளை யோசேப்பு முதலில் மறுத்தார்,பின்பு ஏற்றார்!

நிறைமாத கர்ப்பிணியாய் நாசரேத்தில் இருந்து, பெத்லகேமுக்கு குடி மதிப்பு எழுத
பயணம் தொடர்ந்தனர்!

மரியாளுக்கோ வழியில் கர்ப்ப வேதனை! வீடுகளிலும், வீதிகளிலும், விடுதிகளிலும்,
கணக்கு கொடுக்க வந்த மக்கள் கணக்கில்லாமல் நிறைந்திருந்தனர்!

பேறுகாலத்தை நெருங்கி பேதலித்த மரியாளோ!
தங்க இடம் இன்றி தவித்து நிற்க!
ஊருக்கு அப்பால் ஒதுங்கிக் கிடந்த!
மாட்டுக் குடிலில் மையமாயினர்!

உலகை இரட்சிக்க வந்த இரட்சகருக்கு,
கிடைத்ததோ மாட்டுத் தொழுவம்!

ஞானிகள் வழி மாறியதால்!
குழந்தையை கொல்லும் கயவன்!
எழும்பி விட்டான் எகிப்துக்கு எழுந்து போங்கள் என்று கூற!

மரியாளுக்கு குழந்தை பெற்ற வலி போகவில்லை!
பாலை நெடும் வெளியில் காலை சுடும்!
மணலில் கடந்தே சென்றார்கள்!

எகிப்திலே அகதிகளாக வாழத் தொடங்கினர்!
வளம் பெறும் நாள் வந்தது நாசரேத்து திரும்பினர்!

12 வயதில் இயேசு விடுத்த கேள்விகளுக்கும், அவர் கொடுத்த பதில்களுக்கும் சில
நரைகள் தங்கள் அறிவுக்கு திரை போட்டுக் கொண்டன!
நாற்றாங்காலில் இவ்வளவு ஞானமா!

இயேசுவின் பாடு மரணத்தில் தாய் இருக்க, தமையன் தலை சாய்ப்பதோ என்று!

இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு,இறப்பு
எல்லாவற்றையும் தம் உள்ளத்தில் வைத்து
சிந்தித்தவராய் இருந்தார் தாய் மரி...!

சிந்தனை செய் மனமே.....

இறைபணியில்,
ஆயரம்மா.

*Mrs . P . Velanganni*





# செயலர் மடல்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நம் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக. இந்த 2023 ஆம் வருடத்தின் துவக்க முதல் நம்மை வழி நடத்தி இந்த கடைசி மாதத்திற்குள்ளும் அனைவரையும் பிரவேசிக்க செய்த ஆண்டவர் இயேசுவுக்கு ஸ்தோத்திரம்.

கடந்த நவம்பர் மாதம் 5–ஆம் தேதியில் நமது அறுவடை பண்டிகையை சிறப்பாக நடத்தி முடிக்க ஆண்டவர் கிருபை செய்தார். நமது அறுவடை பண்டிகை சிறப்பாக நடைபெற உதவின நமது ஆயர், கூட்டுநர்,செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து ஐக்கிய குழு பொறுப்பாளர்கள், தன் ஆர்வலர்கள் மற்றும் பல விதங்களில் உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன்.

இன்னும் மற்ற அமீரகத்தில் உள்ள திருச்சபையின் அறுவடை பண்டிகைகளில் உற்சாகமாக கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய திருச்சபையில் நவம்பர் 26 ஆம் தேதி நடந்த RETREAT கூடுகையில் கலந்து கொண்டு தொடர்ந்து ஊழியத்தை செய்து வரும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இந்த டிசம்பர் மாதத்தில் கிறிஸ்து பிறப்பு பண்டிகையை கொண்டாட இருக்கிறோம், அதற்காக நம் ஆலயத்தில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்விலும், ஆராதனையிலும் திருச்சபையாராக கலந்து கொள்வோம்.

இந்த வருடத்தின் CAROL ROUND இம்மாதத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது வாரத்தில் நடத்த தீர்மானித்திருக்கிறோம். திருச்சபையாராக இதில் உற்சாகமாக கலந்து கொண்டு இயேசு கிறிஸ்து பிறப்புச் செய்தியை மக்களுக்கு அறிவித்து,

ஒவ்வொருவரையும் வாழ்த்துவோம் வாருங்கள். நமது சிந்தனைக்கு......

இயேசு ஏன் பிறந்தார்? இயேசு ஏழை தச்சரின் மகனாக யூதர்களின் அரசராக மாட்டுத் தொழுவில் பிறந்தார். இயேசுவைப் போல் பரிசுத்த ஆவியால் பிறந்தது யாருமே இல்லை.

1. இயேசு உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். (யோவான் 1:29)
2. மனுஷகுமாரன் கெட்டுப் போவதை இரட்சிக்க வந்தார். (மத்தேயு 18:11)
3. இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார். (லூக்கா 19:10)
4. மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல,இரட்சிக்கதற்காக வந்தார். (லூக்கா 9:56)
5. அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனை கொடுக்கவும் வந்தார். (மத்தேயு 20:28)

இயேசு தேவனிடமிருந்து வந்தபடியால் தேவகுமாரன் என்று அழைக்கப்பட்டார்.
அவர் ராஜகுலம் வழியே வந்ததால் தாவீதின் குமாரன் என்று அழைக்கப்பட்டார்.
மனுஷ உரு எடுத்து வந்தபடியால் மனுஷகுமாரன் என்றும் அழைக்கப்பட்டார்.

இயேசுவின் பிறப்பு அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது, நாம் அனைவரும் கிறிஸ்து பிறப்பு பண்டிகையை மகிழ்வுடன் கொண்டாடுவோம். ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக, ஆமென்.


இறைப் பணியில்

Mr. C . Havin Heba

திருச்சபைச் செயலர்









யூடியூப்' பாடல், யூடியூப்' ஆராதனை, யூடியூப்' செய்தி, யூடியூப்' ஜெபம்... இதுதான் கர்த்தரை கனப்படுத்தும் புதிய தலைமுறையின் ஆராதனை முறை..!!

நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு (வெளி. 2:4). என்கிற கர்த்தரின் கூக்குரல் கேட்கலையோ..? காலத்தைப் பார்த்தால் போதகர்களாக இருக்க வேண்டிய நாம், யூடியூபையே நம்பி கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறி செல்ல எத்தனிக்கிறோம், ஆனால் பலன் காணவில்லை. கிறிஸ்துவை நமக்கு போதித்து, காட்டித் தந்தோர் வாழ்ந்த காலத்தில், இப்படிப்பட்ட சமூக வலைத்தளங்கள் ஒன்றுகூட இருந்ததில்லை, ஆனால் கிறிஸ்துவை திருச்சபையிலும், ஓய்வுநாள் பாடசாலையிலும், வேதாகமத்தின் ஜீவ வார்த்தைகளைக் கொண்டு சரியாக அடையாளம் காட்டி தந்தார்கள். நம்மை கருத்தாய் போதித்து அன்றாடம் கிறிஸ்துவுக்குள் வளர்த்தார்கள்.

தேவஜனமே..! நான் ஒன்றும் யூடியூப்க்கு எதிரானவன் அல்ல, ஆன்லைனில் ஆராதனை நடத்துகிறவர்களை நான் குற்றப்படுத்தவும் இல்லை.. இங்கு நான் பதிவிட விரும்புவது, அதிகாலையில் எழுந்து கர்த்தரின் பாதத்தில் அமர்ந்திருந்து அவருடைய சத்தத்தை கேட்பதை உதறி தள்ளிவிட்டு, யூடியூப்க்கு முன்னால் மண்டியிட்டு நிற்பதையும், திருச்சபையின் ஐக்கியத்தை துறந்து, யூடியூப் ஆராதனையில் மட்டுமே மூழ்கிக்கிடப்பதை'தான் தவறு என சுட்டிக்காட்டுகிறேன். இந்த யூடியூ'பின் வருகையால் அநேக கிறிஸ்தவர்கள் இன்று திருச்சபையின் ஐக்கியத்தையே மறந்து விட்டார்கள் என்பது எவ்வளவு வேதனை. இது ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்யின் தந்திரம் என்பதை நாம் உணராமலிருப்பது ஏன்..?

கொரோனா காலத்தில் ஆலயக் கதவுகள் அடைப்பட்டபோது கட்டாயத்தின் பெயரில் யூடியூபில் ஆராதிக்க தள்ளப்பட்டோம், ஆனால் இன்று அதுவே அநேக கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையாகி போனதுதான் வேதனை. (கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். சங் 122:1) இவ்வசனத்தின் ஆழத்தை அல்ல, வசனத்தையே மறந்து விட்டோம் என்பதுதான் உண்மை நிலை. ஒவ்வொரு நாளும் கண்ணின் மணி போல் நம்மை தாங்கி, பாதுகாத்து, வழிநடத்தி, ஞானத்தாலும், கிருபையினாலும்

முடிசூட்டி வழி நடத்தி வரும் தேவாதி தேவனுக்கு யூடியூப் ஆராதனை'தான் நாம் கொடுக்கும் காணிக்கையா..? இதற்காகத்தான் இத்தனை சிலுவை பாடுகள் பட்டேனோ என்கிற கர்த்தரின் கண்ணீர் ஏன் புரியவில்லை...?? விசுவாசியே... இயேசுவின் இரண்டாம் வருகை யூடியூப்'ல் நேரலையில் ஒளிபரப்பாவதில்லை என்பதை மறந்துப்போகாதே..!!!

மற்றொருபுறம், யூட்யூபில் கிறிஸ்துவை போற்றி புகழ்ந்து பாடுகிறேன் என்ற போர்வையில் தனக்குத் தானே கனத்தையும் மகிமையும் தேடிக் கொள்ளுகிற கூட்டத்தின் பின்னால் மறந்தே ஓடுகிறது ஓராயிரம் கிறிஸ்தவ கூட்டம். அலங்காரமான ஆடை அணிந்து, கர்த்தர் தனக்குத் தந்த அழகிய முகசாயலை முற்றிலும் வேறுபட அலங்காரம் செய்து, கேமராவின் முன்னால், கிறிஸ்துவின் சிலுவை அன்பை மறந்து தன்னுடைய மேன்மைக்காக, வருமானத்திற்காக பாடல்களை எழுதி பாடுகிற நபர்கள் யூடியூபில் ஏராளம். நாமும் சில நேரங்களில், சத்திய வேதத்தின் அடிப்படையில் தீங்கானவைகளை நிதானித்து அறிய தெரியாமல், மறந்தே அவற்றின் ரசிகர்களாய் மாறிவிடுகிறோம் என்பது ஓர் நிதர்சன உண்மை.

மூன்று வேளை உணவு கிடைப்பது போல், இன்று எல்லா வேளையும், தேவனுடைய வார்த்தை அலைபேசியில் வந்து குவிகிறது, தேவனோடு ஒழுங்கான ஐக்கியம் இல்லாததால் ஏனோ, நம் இருதயத்துக்குள் செல்ல முடியாமல் அலைபேசியிலேயே யாருக்கும் பிரயோஜனமின்றி குவிந்து கிடக்கிறது. சமூக வலைத்தளங்களில் வலம் வரும் வசனங்களையும், வேதாகம வியாக்கியானங்களையும், ஆராதனையும், ஜெபங்களையும் சமயம் வாய்க்கும் போது கேட்டு திருப்தி அடைவதில் தவறில்லை. (உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும். சங் 119:148) என்ற வசனத்திற்கேற்ப்ப விடியலை காணச்செய்த தேவனுடைய சத்தத்தை “அதிகாலையில்” கேட்டபின், கர்த்தர் அனுமதித்தால், சமயம் வாய்த்தால், சமூக வலைத்தளங்களில் தேவனுடைய வார்த்தையை கேட்க பழகினால் அது பலனளிக்கும்... அதுவே நம்மையும், நம் குடும்பத்தையும் தேவனண்டை சேர்க்கும். கிறிஸ்துவின் வழியில் வேரூன்றி நிற்க அதுவே வழி, அதுவே சத்தியம், அதுவே ஜீவன். தேவனோடு அனுதினமும் தனிமையில் பேச கற்றுக்கொள்வோம், தேவனோடு நடக்க பழகிக்கொள்வோம்..

விசுவாசியே...ஓடினதும் ஓடுகிறதும் வீணாகதபடிக்கு எச்சரிக்கையாயிரு..!!! ஒருவேளை கடைசி காலங்களில் இதுபோல கடினமான சவால்கள் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தாலும்; தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, காலங்களை கர்த்தருக்கென்று பிரயோஜன படுத்திக்கொள்ளவோம்.

ARTICLE BY

MR.ASHOK KUMAR

MEN'S FELLOWSHIP

# கிறிஸ்துமஸ் உருவான வரலாறு

கிறிஸ்துமஸ் என்றவுடன் நினைவுக்கு வருவது விருந்து தான். அனால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் துவங்கிய பின்னணியும் அதில் ஏற்பட்ட பல மாறுதல் குறித்தும் பலருக்கும் தெரியாது. இயேசு கிறிஸ்து பிறந்த தினம் தான் கிறஸ்துமஸ் என்பது பலருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் இயேசு கிறிஸ்து எப்போது பிறந்தார்? மற்றும் கிறிஸ்துமஸ் என்ற வார்த்தையின் பின்னணியும்சு
வாரஸ்யமானது

கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை கிறிஸ்ட் – மாஸ் என்ற இரு வார்த்தைகளின் இணைப்பில் உருவானது. இயேசு கிறிஸ்து கி.மு–7 க்கும் கி.மு–2க்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

யூதர்களின் பருவ காலம், நாள் காட்டிகள் முலம் கணக்கிட்டு ஒரு யூக அடிப்படையில் தான் டிசம்பர் 25ம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகையாக கொண்டாடப் படுகிறது.

கிறிஸ்துமஸ் பண்டிகையை முதன்முதலில் நான்காம் நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்று குறிப்புகள் உள்ளன.

இங்கிலாந்து மன்னன் ரிச்சார்ட்–II கிறிஸ்துமஸ் பண்டிகையை மிக விமர்சையாக 1377ல் கொண்டாடினார். 1643ம் ஆண்டு இந்தோனேசியாவில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு “கிறிஸ்துமஸ் தீவு” என்று பெயரிடப்பட்டது.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக முதன்முதலில் கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் வழக்கம் 1510ல் ரிகா என்ற இடத்தில் துவங்கியது. 1836ம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு அலபாமா என்ற பகுதியில் அரசு விடுமுறை அளிக்கப்பட்டது.

1847ல் தான் கேரல் செர்வீஸ் நகழ்ச்சிகள் முதன்முதலில் பிரான்ஸில் நடத்தப்பட்டது. அந்த நிகழ்வில் "ஓ ஹோலி நைட்" என்ற பிரபல கிறிஸ்துமஸ் பாடல் பாடப்பட்டதாக கூறப்படுகிறது.

பரிசுத்த வேதாகமத்தில், மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில், உலகத்தின் ஜனங்களை இரட்ச்சிக்க, அன்னை மரியாளிடம் பிறந்த தவப்புதல்வராம் இயேசுவை தரிசிக்க வந்தவர்கள் தங்கள் பொக்கிஷங்களிலிருந்து பொன்னும், பொருளும் பரிசளித்தனர் என்று கூறப்பட்டுள்ளது. எனவே தான், கிறிஸ்துமஸ் நாளில் பரிசளித்து மகிழ்வது வழக்கமாக இருக்கிறது.

பல நாடுகளில், கிறிஸ்துமஸ் தினம் விடுமுறையாக அறிவிக்கப்பட்டு, புனித நாளாக கொண்டாடப்படுகிறது. சாதாரணமாக கொண்டாடப்பட்ட கிறிஸ்துமஸ் பண்டிகை, இந்நாட்களில் கிறிஸ்துமஸ் மரம், குழுப்பாடல்கள், வால் நட்சத்திரம், வண்ண ஒளி விளக்குகள் மற்றும் பல ஆரவாரங்களோடு உலகெங்கும் வெகு சிறப்பாக கொண்டாடப்படு கிறது.

தொழுவம் ஒன்று தொழுகை பெற்ற திருநாள்.
ஒதுக்கப்பட்டவை வணக்கம் பெறுமென வருகையால் சொன்ன நன்னாள்.
ஆடிடைக்குடியில் ஆதவன் உதித்த அதிசய நாள்
இந்த கிறிஸ்துமஸ் நாள்.
இந்த கிறிஸ்துமஸ் திருநாள் அனைவருக்கும் மகிழ்ச்சியாய் , ஆசீர்வாதமாய் அமையட்டும்.
அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்.

Article by

**SIS. JEIN RAJAVEL**

WOMEN'S Fellowship



# ஒத்னியேல்

## தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுத்த வாலிபன்

நியாயாதிபதிகள் 3: 1—19

ஒத்னியேல் என்றால் தேவனின் வல்லமை (அல்லது) தேவனின் சிங்கம் என்று பொருள். இவன் காலேபின் சகோதரனாகிய கேனாசின் குமாரன் ஆவான். இவன் யூதா கோத்திரத்தைச் சார்ந்தவன். இவன் யோசுவாவிற்குப் பின் இஸ்ரவேல் ஜனங்களின் நியாயாதிபதியாக 40 ஆண்டுகள் நியாயம் விசாரித்தான். இஸ்ரவேலில் எழும்பின முதலாம் நியாயாதிபதியும் இவனே.

> "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்னியேல் என்னும் ஒரு ரட்சகனை அவர்களுக்கு எழும்பப்பண்ணினார்."
>
> —நியாயாதிபதிகள் 3:9

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை மறந்து, பாகால்களை சேவித்து, அந்நிய நுகங்களோடு திருமண உறவுகளை ஏற்படுத்தி கர்த்தருக்கு பொல்லாப்பான காரியங்களை செய்துவந்ததினால். கர்த்தர் கடும் கோபம்கொண்டு அவர்களை மெசொபொத்தோமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷாதாயிமின் கையில் அடிமையாக விற்றுப்போட்டார். எட்டு ஆண்டுகளுக்குப் பின் அம்மக்கள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள், அந்த சமயத்தில் கர்த்தர் எழுப்பின மனிதன் தான் இந்த ஒத்னியேல்.

பொல்லாப்பு மிகுதியான ராஜாவின் கைகளில் இருந்து, கர்த்தரை அறியாத புதிய இஸ்ரவேல் சந்ததியினரை காப்பாற்றுவதற்காய் கர்த்தர்மேல் அதிகமாய் விசுவாசம் கொண்டு யுத்தத்தை மேற்கொண்டான். ஒத்னியேலின் விசுவாசத்தின்நிமித்தம் கர்த்தருடைய ஆவியானவர் அவன்மேல் இறங்கி, அவனைவிட பலசாலியான மெசொபொத்தோமியாவின் ராஜாவை அவன் கைக்கு ஒப்புவித்து, இஸ்ரவேல் மக்களுக்கு விடுதலைகிடைக்கச்செய்தார்.

யோசுவாவிற்குப் பின்பு வந்த நல்ல நியாயாதிபதியான இவன், இஸ்ரவேலை 40—ஆண்டுகள் கர்த்தருக்குள் நடத்திவந்ததால், தேசம் முழுவதும் சமாதானம் இருந்தது. யோசுவாவிற்குப் பின்பு யெஹு, தெபொராள் மற்றும் கிதியோன் போன்றோர் தலைமைத்துவம் ஏற்று சிறப்பாக நடத்த அடித்தளமாக இருந்தவனும் இந்த ஒத்னியேலே.

அன்றைய நாட்களில் ஜனங்களின் தவறுகளை கண்டித்து உணர்த்தி அவர்களை கர்த்தருக்கு நேராய் நடத்துவதே இவனுக்கு மிகவும் சவாலாக இருந்தது. ஆனாலும் அவன் சோர்வடையாமல் அவர்களை கர்த்தரின் பக்கமாய் நடத்தி யுத்தத்திலும் வெற்றி பெற்றான்.

ஒத்னியேல் கர்த்தரின் சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து அவருக்கு கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தையின்படி நடந்ததினால் யுத்தத்தில் வெற்றி பெற்றான். எனவே நாமும் நம்மை தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து நடந்தால், நம்முடைய வாழ்வில் சவாலாக தோன்றும் காரியங்களில் இருந்து நமக்கும் வெற்றியைகொடுக்க நம் தேவன் இன்றும் வல்லவராக இருக்கிறார்.

தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்போம்.... சவால்களை முறியடிப்போம்...

தேவனுக்கே மகிமை உண்டாவதாக..

ARTICLE BY

MR. J.STEPHEN CHELLARAJ

YOUTH FELLOWSHIP



# HEALTHY EATING HABITS

ARTICLE BY
MRS. JACKULIN MILKA



### MEAL

- Eat three medium-sized meals per day. Don't skip breakfast because it provides you with energy for the day.
- Eat healthy snacks between meals (a piece of fruit, nuts, or low fat dairy).
- Eat dinner early and avoid eating late at night.



### FOOD PREPARATION

- Cook your food in a healthy way (like: boiling, steaming, grilling) and avoid adding a lots of fat, avoid frying. Trim visible fat off meat and remove skin from chicken.
- Prepare your meals in a safe way; wash your hands and utensils well before preparing food to avoid bacterial contamination.

### EATING THE FOOD: 

Eat your food slowly and chew it well



Maintain healthy diet by following these tips:

- Drink a lot of water (at least 8-10 cups per day).
- Eat a variety of different colours of fresh, canned or dried fruits. Aim twice daily.
- Eat a variety of vegetables, different colours focus on dark green and orange one like carrots, pumpkin, broccoli, spinach.
- Include a variety of high fibre foods daily like whole grains, bran bread, brown bread, fruits and vegetables.
- Have 2-3 cups of low fat dairy products every day because they are rich in calcium which is essential nutrient for strong bones.
- Avoid animal fats (like: ghee, lard, butter and cream). - Eat legumes like lentils, chickpeas, white broad beans and kidney beans.
- Reduce portion size of red meats, beef, and goat, lamb and camel meats; and eat lean meat like fish, chicken breasts and turkey.

## FOOD STORAGE

Store your food properly (hygiene, ventilation, storage temperature).





# NOVEMBER WINNERS

## Find the way

- SHERINSHA
- REEGAN SHAN
- JEMIMA

## Kids Colouring

- OSHUA JOSE
- REEGAN SHAN
- JESSICA.

## Word Search

- SHERINSHA
- JOSHUA JOSE
- JANET THIRSHA

## Cross Word

- AJINSHA
- SHERINSHA
- JANET ZAHARINA

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month - Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# DEUTERONOMY: 1-12

## உபாகமம்: 1–12

DECEMBER '23 - QUESTIONS

1. கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினவன் யார்?
2. சேரேத் ஆற்றைக் கடக்குமட்டும் சென்ற காலம் எவ்வளவு?
3. யோர்தானை நீ கடந்து போவதில்லை என்று கர்த்தர் யாரிடம் கூறினார்?
4. கர்த்தரைக் கண்டடைய எவ்வாறுத் தேட வேண்டும்?
5. கர்த்தருடைய வார்த்தைகளை எத்தனை கற்பலகைகளில் எழுதிக் கொடுத்தார்?
6. கர்த்தர் யாரிடம் ஆணையிட்டுக் கொடுத்திருந்தார்?
7. 'நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்' வசன இருப்பிடத்தை குறிப்பிடவும்?
8. எங்கிருந்து தண்ணீரைப் புறப்படப் பண்ணினார்?
9. மோசே எத்தனை நாள் அப்பம் புசிக்கவில்லை?
10. உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ள வேண்டும் என்பவை எது?
11. கர்த்தரின் வார்த்தைகளை எங்கேப் பதிக்க வேண்டும்?
12. சர்வாங்க தகன பலிகளை எப்படி பலியிட வேண்டும்?

QUIZ TIME?

### நவம்பர்- 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. எண்: 25:11 | 2. எண்: 26:59 | 3. எண்: 27:18 | 4. எண்: 28:24 | 5. எண்: 29:7
6. எண்: 30:5,8 | 7. எண்: 31:22,23 | 8. எண்: 32:23 | 9. எண்: 33:39 | 10. எண்: 34:39
11. எண்: 35:33 12. எண்: 36:9

திருமதி.ரேனா ஜோஸ் செல்வகுமார், திருமதி.ஜெயின் அற்புதக்கனி, திருமதி.ரோஸ்லின் தமிழ்ச்செல்வி, திருமதி.ராதிகா செல்வகுமார், செல்வி.அஜின்ஷா

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.


மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / DECEMBER'23 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name: ____________________ Date: ____________

# Kids Coloring




Find the Way

Name : ........................................

# Christmas Maze

Help Santa find Rudolph



# WORD SEARCH

Rebus puzzles or picture puzzle games depict a group of images and symbols that represent words or phrases. For instance, the letter H in front of a picture of an ear would become H+ EAR which could mean HEAR or HERE. Can you decipher the 12 rebus puzzles below to find words or phrases associated with the Christmas season?





Name : ..............................................................

# CROSS WORDS

Name : ..........................................................................

# MERRY CHRISTMAS

## Santa's Crossword




**ACROSS**

1. Famous snowman
4. What Santa travels in
8. Makes toys for Santa
9. Used to decorate a Christmas tree
10. December 25
11. Hung by the chimney with care
12. What presents are left under

**DOWN**

2. Reindeer with a shiny red nose
3. Covers the ground on a white Christmas
5. Santa comes down this
6. Red and White hooked shaped candy
7. Left under the tree Christmas morning
10. Left out for Santa
11. Jolly toy maker

# DECEMBER - 2023

| | |
|---|---|
| 01-DEC | Master. Faylin Joanna Prince D/o Mr. Prince Pitchiah |
| 01-DEC | Master. Jeffry Immanuel S/o Mr. Joel Ranjith Kumar |
| 01-DEC | Mrs. Kalyani Sankaran |
| 02-DEC | Ms. Angelin Sophia Nelson |
| 04-DEC | Master. Chris Gabriel S/o Mr. Daniel Durai Singh |
| 11-DEC | Master. Aaren Christo S/o Mr. Prem Jenifer |
| 12-DEC | Mr. Jayapradheep Christopher |
| 13-DEC | Mr. Richard |
| 16-DEC | Mr. Biju Mohan |
| 17-DEC | Mrs. Sweetlin Abi |
| 17-DEC | Baby. J. Johana S/o Mr. Jose Selva Kumar |
| 18-DEC | Mr. V. Arun Kumar |
| 19-DEC | Mr. J. Augustin |
| 23-DEC | Mr. I.Darwin Isac |
| 24-DEC | Master. Rishon Yojit S/o Mr. Sathish Kumar |
| 25-DEC | Mr. C. Rajesh Anbu |
| 25-DEC | Master. Haryter Samuel S/o Mr. Havin Heba |
| 25-DEC | Mr. Balaji Ramaiyan |

*Wish you many more happy returns of the day God bless you all*

# DECEMBER - 2023

| | |
|---|---|
| 26-DEC | Mr. Jefrin Israel |
| 27-DEC | Master. Shelbino Paul S/o Mr. Melbin Paul |
| 28-DEC | Mrs. Prasana |
| 28-DEC | Mrs. Rena Ivolet Jasmine |
| 31-DEC | Ms. M. Angeline Shally |
| 31-DEC | Mr. T. Sathish Kumar |

# DECEMBER *Wedding* ANNIVERSARY

**04-DEC** Mr. John Prabakaran & Mrs. B. Swetha

**08-DEC** Mr. Alvin Kumar Asirmanns & Mrs. M.Subha Al

**09-DEC** Mr. I. Berlin Jose & Mrs. Godshilin

**13-DEC** Mr. Timotheus Dill Suresh & Mrs. Sathvikalakshm

**14-DEC** Mr. Thiyagu Murugaraj & Mrs. Jennifer

**20-DEC** Mr. M. Santhosh Kumar & Mrs. Helena Santhosh

*Wishing you a lifetime of love, laughter, and happiness on your Anniversary*

# OCTOBER Wedding ANNIVERSARY

**21-DEC**
Mr. G. Verslin Benny
&
Mrs. S. Divya Sherrin

**26-DEC**
Mr. Stephen Pradeepkumar
&
Mrs. Hephzibah

**27-DEC**
Mr.. Selvistor Solomon
&
Mrs. Manjushah

**27-DEC**
Dr. Pradeev Raj
&
Mrs. Ramya Mergaratee

**28-DEC**
Mr. Joel Ranjith Kumar
&
Mrs. Shafeena

**28-DEC**
Mr. Appavoo Nicson Kennedy
&
Mrs. Vimala Nicson

**28-DEC**
Mr. Herchil Harish
&
Mrs. Blessy Grace Jonish

**29-DEC**
Mr. Derin Joy
&
Mrs. Fanny Esther

**29-DEC**
Mr. T. Robert Wilson
&
Mrs. Aji Kumari



MERRY

# Christmas

AND HAPPY NEW YEAR

*May this Christmas end the Present Year on a Cheerful note and make way for a fresh and bright New Year. Here's wishing you all a Merry Christmas & Happy New Year - 2023*













# MINISTRY LEADER'S & VOLUNTEER'S MEET











# Merry Christmas & Happy New Year


**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**



**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**